**S.T.C No.5/2024**

**Dated: 18.09.2024**

**PW: 1** சிவசங்கர்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நீங்கள் எந்த ஊரில் குடியிருக்கீறிர்கள் என்றால் நான் கோவில்பட்டியில் குடியிருக்கிறேன். எதிரி சென்னையில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். உங்களது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு மற்றும் முதல் விசாரணைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் எதிரிகளுக்கு பெரும்தொகையை வங்கி கணக்கு மூலமாக பல்வேறு தேதிகளில் கொடுத்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் ஒரு எதிரி இருக்கிறார் என்றால் சரியல்ல. 3 எதிரிகள் இருக்கிறார்கள். மஞ்சு ,ரமாதேவி ஆகியோர்க்கு மட்டுமே வங்கியின் மூலமாக பணம் போட்டு விட்டேன்.

2. மஞ்சு ,ரமாதேவி எதிரியின் பெண்பிள்ளைகள் என்றால் சரிதான். வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மேற்படி மஞ்சு ,ரமாதேவி வங்கி கணக்கில் எனது வங்கி கணக்கு மூலமாக கொடுத்ததாக உங்களது வழக்கு என்றால் சரிதான். நீங்கள் குறிப்பிடும் பெரும் தொகை எவ்வளவு என்பது உங்களது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் யாருக்கு யாருக்கு உங்களது வங்கி கணக்கு மூலமாக பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டது என்பது சம்பந்தப்பட்ட ஆவணம் உங்களிடம் உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி மஞ்சு ,ரமாதேவி ஆகியோர்களுக்கு எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விபரம் உங்களது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காலாவதியாக பாதிக்கப்பட்ட தொகையாக இருப்பதால் மேற்கண்ட விபரம் உங்களது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை தொகையில் ஒரு ருபாய் கூட உங்களது வங்கிக்கணக்கு மூலமாக எதிரிக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட காலத்திற்கு பிறகு கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் மேற்படி மஞ்சு ,ரமாதேவி ஆகியோர்கள் மீது ஒரு புகார் மனு கொடுத்தீர்கள் என்றால் சரிதான்.

4. நீங்கள் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டார் என்றாலும் அந்த விசாரணையின்போது

கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தொகை பெருந்தொகையாக உள்ளது என்றும் அதனால் மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்குமாறு உங்களை அறிவுறுத்தினார்கள் என்றாலும் சரியல்ல. விசாரணைக்காக மேற்படி மஞ்சு ,ரமாதேவி ஆஜராகவில்லை, ஆனால் எழுத்து மூலமாக பதில் கொடுத்தார்கள் அதன்பிறகு காவல் ஆய்வாளர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் சென்று புகார்கொடுக்குமாறு என்னை அறிவுறுத்தினார்.

5.மேற்கண்ட புகார்மனு ,காவல் துறை மேற்கொண்ட விசாரணை அதன் முடிவு, ஆகியவைகள் சம்பந்தப்பட்ட ஆவணம் உங்களிடம் உள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் குறிப்பிடும் புகார் மனு எங்கே கொடுக்கப்பட்டது என்றால் முதலமைச்சர் தனிப்பிரிவு, கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், காவல் துறை இயக்குனர் ஆகியோர்களிடம் கொடுத்தேன். மேற்படி புகார் மனுக்கள் கொடுத்தது சம்பந்தமாக புகார் மனு ஏற்பு ரசீதோ, அல்லது அஞ்சலக ஒப்புகை அட்டை இருக்கிறதா என்றால் அஞ்சலக ஒப்புகை அட்டை இருக்கிறது.

6. முதலமைச்சர் தனிப்பிரிவு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தமிழ்நாடு காவல் துறை இயக்குனர் ஆகியோர்களிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுக்காளனது விசாரணைக்காக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவிசாரணை முடிக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு மனு விசாரணை முடிக்கப்பட்ட கோப்புகள் உங்களிடம் உள்ளது என்றால் சரியல்ல. கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சொல்லியும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டும் என கூறியும் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1ல் Cr.M.P No. 3267/2023ல் ஒரு மனுவை தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு என்றால் சரிதான். **(சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மேற்படி மனுவின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)**

**7.** எ.சா.ஆ.1 மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு மேற்படி நீதிமன்றம் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ,.சா.ஆ 1 புகார்மனுவில், " சென்னையிலுள்ள தமிழ்நாடு தலைமை செயலகத்தில் எனக்கு வேலை வாங்கி தருவதாக சொன்னதன் அடிப்படையில் பணம் கொடுத்தேன் " என குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். எ.சா.ஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்காக வழக்கு காசோலை கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அதே போல் எ.சா.ஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்காக

இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

8. எ.சா.ஆ1ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை தவிர உங்களுக்கும், மேற்படி மஞ்சு ,ரமாதேவி ஆகியோர்களுக்கும் இடையே எந்த பணபரிமாற்றமும் கிடையாது என்றால் சரியல்ல, இருந்தது. வழக்கில் கண்ட புகார் மனுவிற்கான காசோலை வழக்கு காசோலை கிடையாது என்றால் சரிதான். எ.சா.ஆ1ல் குறிப்பிடப்பட்டுள்ள பணபரிவர்த்தனைக்கான ஆவணங்கள் உங்களிடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தப்பட்ட பணபரிவர்த்தனைக்கான ஆவணங்கள் உங்களிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 பணபரிவர்த்தனை சம்பந்தப்பட்ட ஆவணங்களை உங்களால் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான்.

9. வழக்கு காசோலை சம்பந்தப்பட்ட பணபரிவர்த்தனைக்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு பணபரிவர்த்தனைகளும் உங்களுக்கும் மேற்படி மஞ்சு ,ரமாதேவி ஆகியோர்களுக்கு இடையே மட்டும் நடைபெற்றது என்றாலும் மேற்படி பணபரிவர்த்தனைகளுக்கும் எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரிதான். வழக்கு காசோலையை உங்களிடம் கொடுத்தது யார் என்றால் கூரியரில் வந்தது. யார் விலாசத்திற்கு வந்தது என்றால் என்னுடைய விலாசத்திற்கு வந்தது. மேற்படி காசோலையை மஞ்சு அனுப்பினாரா என்றால் ஆமாம்.

10. எ.சா.ஆ1 புகார்மனுவின் மீது கோவில்பட்டி நீதீத்துறை நடுவர் எண்.1 பிறப்பித்த உத்தரவின்படி காவல்ஆய்வாளர் , அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு விசாரணைக்காக நீங்கள் ஆஜர் ஆனீர்கள் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் நீங்கள் மஞ்சு ,ரமாதேவி, ஆகியோர்கள் ஆஜர் ஆனீர்கள் என்றால் சரிதான். ஆனால் மேற்படி விசாரணையில் எதிரி துரைராஜீவும் ஆஜர் ஆனார். அந்த விசாரணையின் முடிவு என்ன ஆனது என்றால் மஞ்சு ,ரமாதேவி மற்றும் துரைராஜ் ஆகியோர்கள் பணத்தை ஒரு வாரத்திற்குள் தந்துவிடுவதாக சொன்னார்கள்.

10. மேற்படி விசாரணையின்போது மஞ்சு ,ரமாதேவி ஆகியோர்களிடம் காசோலை கொடுத்தால் அதன் அடிப்படையில் விசாரணையை முடித்து வைக்கிறேன் என காவல் ஆய்வாளர் சொன்னார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எ.சா.ஆ.1 மனுவின் மீது நீதிமன்ற உத்தரவின்படி காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த அறிக்கை என்றால் சரியல்ல. கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்1ல் காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த அறிக்கை உங்களிடம் உள்ளது என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் விசாரணைக்கு பிறகு

தான் வழக்கு காசோலை உங்களிடம் வந்தது என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எந்த தேதியில் உங்களிடம் வந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

11. எ.சா.ஆ 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தை வழக்கு தாக்கல் செய்த போது உங்களின் வழக்கறிஞரிடம் சொன்னீர்களா என்றால் இல்லை. வழக்கு காசோலையை வசூலுக்கு போடுவதற்கு முன்பு எதிரி துரைராஜ்வுக்கு பதிவு தபால் முலமாக ஒரு தபால் அனுப்பீனிர்கள் என்றாலும், அந்த தபால் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றாலும் சரிதான் . ( **சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மேற்படி தபால் எ.சா.ஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. ) எ.சா.,ஆ.2 லும்**
" சென்னை தலைமை செயலகத்தில் வேலை வாங்கி தருவதாக கொடுத்த பணம்" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களுக்கும் மேற்படி மஞ்சு ,ரமாதேவி ஆகியோரகளுக்கும் இடையே நடைபெற்ற பணபரிவர்த்தனை சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.,

12. உங்களுக்கும் மேற்படி மஞ்சு ,ரமாதேவி ஆகியோரகளுக்கும் இடையே நடைபெற்ற பணபரிவர்த்தனை இந்திய ஒப்பந்த பதிவுசட்டத்தின் படி செல்லாது என்றால் சரியல்ல. ஒப்பந்த பதிவுசட்டத்தின்படி செல்லாத ஒன்றை மாற்றுமுறை ஆவணசட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்பதால் தான் முன்வழக்கு விபரங்கள் அனைத்தையும் மறைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எ.சா.ஆ 2 ல் வழக்கு காசோலை எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் மஞ்சுக்கு கொடுக்கபட்ட காசோலை எண், தொகை விபரம் ஆகியவைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. மேற்படி மஞ்சு மீது இந்நீதிமன்றத்தில் S.T.C No.102/2024 என்ற நம்பரில் வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை எண் எ.சா.ஆ 2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மஞ்சு கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையும் கூரியரில் வந்தது என்றால் சரிதான். அது தனியாக வந்தது. மேற்படி கூரியர் கவர்களும் உங்களிடம் உள்ளது என்றால் சரியல்ல. எ.சா.ஆ 2 க்கு பிறகு வழக்கு காசோலையினை வசூலுக்காக தாக்கல் செய்தீர்கள் என்றாலும் பணம் இல்லை என்ற காரணத்துடன் காசோலை திருமபி வந்துவிட்டது என்றாலும் சரிதான்.

14. அதன்பிறகு காசோலை திருப்பப்பட்ட விபரத்தை சொல்லி 10.11.2023 ல் செனனையிலுள்ள வழக்கறிஞர்கள் திரு.ஜோதிமணி , திருஅருண் ஆகியோர்கள் மூலமாக ஒரு அறிவப்பு அனுப்பினீர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி 10.11.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் இந்த அறிவிப்பை நான் பார்த்ததே இல்லை. மேற்படி 10.11,2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு இந்த வழக்கில் தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 10.11.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை 11.11.2023 ல் எதிரி பெற்று கொண்டதற்கான Postal track என்றால் இதுப்பற்றி எனக்கு தெரியாது.

15. அதன்பிறகு கோவில்பட்டி வழக்கறிஞர் மூலமாக தாவாகாசோலைக்காக 2 வது வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினிர்கள் என்றால் சரிதான். 10.11.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அதை எதிரி பெற்றுக்கொண்டதற்கான விபரம் மற்றும் அதற்கான வழக்குமூலம் எதையும் உங்களது புகார்மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 10.11.2023 ல் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 11.11.2023 ல் பெற்றுக்கொண்டபிறகு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் காலஅவகாசத்திற்கு பிறகு 2 வதாக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

16. இந்த வழக்கானது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்படாததால் உங்களது வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 10.11.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் விபரத்தை பற்றி உங்களது வழக்கறிஞரிடம் சொன்னீர்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் Cr.M.P 3267/2023 ல் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண் 1 பிறப்பித்த உத்தரவு என்றால் இதுப்பற்றி எனக்கு தெரியாது.

17. என்னிடம் காட்டப்படும் எ..சா.ஆ 2 ல் வழக்கு காசோலையும் மஞ்சு கொடுத்தாக சொல்லப்படும் காசோலையும் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எ.சா.ஆ.2 ல் மேற்கண்டவாறு விவரத்தை தெரிவித்துவிட்டு தற்போது வழக்கிற்காக இல்லை என உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையானது கோவில்பட்டிகிழக்குகாவல் நிலைய ஆய்வாளர் அவர்களால் உங்களிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு காசோலை யை கூரியர் மூலம் எதிரி மற்றும் அவரது மகள்களால் உங்களுக்குஅனுப்பப்படவி்ல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் நீங்கள் குறிப்பிடும் கூரியர் கவர்களை உங்களால் தாக்கல் செய்யஇயலவில்லை என்றால் சரியல்ல.

18. எதிரியின் இரண்டு மகள்கள் பெற்றதாக சொல்லப்படும் தொகைக்கு தான் பொறுப்பு ஏற்று கொள்கிறேன் என எதிரி சொன்னதாக சம்பந்தமாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் எழுத்துமூலமாக எழுதி கொடுத்துவிட்டு அதனடிப்படையில் வழக்கு காசோலை கொடுத்தார். காவல் நிலையத்தில் எதிரி எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் எழுத்துமூலமான

ஆவணம் இந்தவழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியின் இரண்டு மகள்களுக்கு நீங்கள் அனுப்பியதாக சொல்லப்படும் பணத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவின் பேரில் விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர் எதிரியின் 2 மகள்களை விசாரணைக்காக அழைத்து கொண்டு போய் காவல்நிலையத்தில் வைத்து கொண்டு புகார்தாராகிய நீங்கள் கேட்டுகொண்டபடி எதிரி ஒரு காசோலையை கொடுத்தால் 2 மகள்களை விட்டுவிடுவதாகவும் இல்லையெனில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து கைதுசெய்ய நேரிடும் என நயவஞ்சமாக பேசி எதிரியிடம் தாவா காசோலை மற்றும் மஞ்சு பெயரிலுள்ள காசோலை ஆகியவைகளை வாங்கி உங்களிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

19. முன்வழக்கு, முன் அறிவிப்பு , முன் விசாரணை ஆகியவைகளை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எந்த கல்லூரியில் என்ன படித்துள்ளீர்கள் என்றால் கோவில்பட்டியிலுள்ள உண்ணாமலை பொறியியல் கல்லூரில் பி.இ மெக்கானிக் படித்துள்ளேன். மஞ்சு, ரமாதேவி ஆகியோர்களுக்கு வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுத்ததாக சொல்லக்கூடிய நாள் தேதி, தொகை மற்றும் ஆவணம் ஆகியவற்றை நீதித்துறை நடுவர் எண் .1 , காவல் துறை விசாரணை இந்நீதிமன்ற விசாரணையின் போது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

20. தாவா காசோலையில் கண்ட தொகைக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் உங்களது பணபரிவர்த்தனையானது சட்டப்படி செல்லாது என்பதால் மாற்றுமுறை ஆவணத்தின் கீழ் வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கானது எந்த தேதியில் ஆன்லைன் மூலமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 10.01.2024 ல் ஆன்லைன் மூலமாக நீதிமன்ற கட்டணம் செலுத்தபட்டுள்ளது எனறால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

<u>மறு விசாரணை இல்லை.</u>

Taken before me in open court, read over to the
witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.